# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
# JAFFNA HINDU COLLEGE

| | T | I |
|---|---|---|

## முதலாந் தவணைப் பரீட்சை - 2019
## 1st Term Examination - 2019

தமிழ் மொழி
Tamil

| நேரம் Time | 3 மணித்தியாலம் |
|---|---|

| தரம் Grade | 10 |
|---|---|

| பகுதி Part | I, II |
|---|---|

### பகுதி I

***1) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

1) தெள்ளியவாலின் சிறுபழந்தொருவிதை இங்கு தெள் என்பதன் ஒத்த சொல்.
1. தெரிகின்ற 2. தெளிந்த 3. மெல்லிய 4. ஒளி

2) சூழும் மாய உலகினில் காணுறும் தோற்றம் இங்கு 'மாய உலகு' என்பது.
1. பெரிய உலகு 2. போலி உலகு 3. நிலையற்ற உலகு 4. துன்பமான உலகு

3) அடக்கம் உடையார் அறிவிலர் இங்கு அடக்கம் என்பதன் எதிர்ச்சொல்.
1. அமைதி 2. ஆரவாரம் 3. பணிவு 4. குழப்பம்

4) நாவலர் அவர்களின் காசம் அவர்களுக்கு எதிர்பாராத அனுகூலம் அளித்தது. இங்கு அனுகூலம் என்பதன் எதிர்ச்சொல்.
1. தீங்கூலம் 2. விலகூலம் 3. பிரதி கூலம் 4. தன்யாலம்

5) தப்பிய கந்தைப் பிதாம்பரம் என்ற சொற்கள் குறிக்கும் பொருள் முறையே.
1. துவைத்த, அழுக்கற்ற, பட்டாடை 2. தப்பிய, அழுக்கான, பட்டாடை
3. தோய்த்த, ஆடை, பட்டுத்துணி 4. தப்பிய, கிழிந்த, பீதாம்பரம்

6) அவர்தமது அங்கவஸ்திரத்தில் ஆவாகனம் பண்ணி வைத்துவிட்டு. இங்கு அங்க வஸ்திரம் என்பது.
1. வேட்டி 2. கலிங்கம் 3. மேலாடை 4. வேலாயுதம்

7) User name (யூசர் நேம்) என்ற சொல்லின் கலைச்சொல் வடிவம்.
1. சொந்தக்காரர் பெயர் 2. பயனாளி பெயர்
3. பயனர் பெயர் 4. பாவனையாளர் பெயர்

8) ஒத்தகருத்துள்ள சொற்களின் இணைப்பு அல்லாதது,
1. பனுவல் - நூல் 2. கெழுதகைமை – கேண்மை.
3. பீதாம்பரம் - பட்டாடை 4. அகராதி – நிகண்டு

9) பனை, தட்டு, நாக்கு என்னும் பொருள்களைத் தரும் சொல்.
1. கற்பகத்தரு 2. நா 3. தாலம் 4. பணி

10) வைக்கோல் அடுக்கப்பட்டிருப்பது,
1. கற்றை 2. போர் 3. சிப்பம் 4. பாடம்


kalvi.lk

11) பின்வருவனவற்றில் பொறுப்பேற்றல் என்ற மரபுத்தொடர் தரும் பொருள்.
1. கழுத்தை நீட்டுதல்
2. கழுத்தை மாற்றுதல்.
3. கழுத்துக் கொடுத்தல்
4. கழுத்தை வாங்குதல்.

12) பின்வருவனவற்றில் அடுக்கிடுக்குத் தொடராக இடம்பெறுவது,
1. வகை தொகை 2. பதை பதைத்த 3. சிவந்த சிவந்த 4. வெளி வெளி

13) மாற்றம் ஏற்படாது என்ற பொருளைத் தரும் பழமொழியின் கருத்து.
1. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
2. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது.
3. அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்.
4. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

14) குண்டர் கூட்டம் கும்பல் என்பது போல நாடகக் கூட்டம்.
1. தொகுதி 2. அணி 3. அவை 4. குழு

15) வெளிப்படைப் பொருளில் புகழ்ந்தும் மறைபொருளில் இகழ்ந்தும் கூறுவது,
1. வசைபாடுதல் 2. அங்கதம் 3. அறம்பாடுதல் 4. விகடகவி

16) அந்த அறிஞர் வெளியுலகந் தெரியாதவர் என்ற கருத்தைத் தரும் உவமைத் தொடர்.
1. ஓரச்சில் உருக்கி வாத்தாற் போல
2. கண்ணை இமைகாப்பது போல
3. குடத்துள் விளக்குப் போல
4. எட்டாப் பழத்திற்கு கொட்டாவி விட்டது போல

17) பின்வருவனவற்றில் கன்னடச் சொல்லாக அமைவது,
1. ஓசை 2. திவான் 3. கடற்பாறை 4. அட்டிகை

18) அதிகாரம் பெற்ற குழுவினர் கூட்டமாக நடத்தும் தொழில் என்பதன் அருஞ்சொற்தொடர்.
1. கூட்டுறவு 2. நல்லிணக்கம் 3. கூட்டுத்தாபனம் 4. இயக்கம்

19) பிரதமர் தெரிவு சரியாக இடம் பெற்றது.
நாட்டின் இறையாண்மை குறித்து அஞ்சத் தேவையில்லை.
மேற்படி வாக்கியங்களை இணப்பதற்கு மிகப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்.
1. எனவே 2. எனினும் 3. அத்துடன் 4. ஆனால்

20) பொதுக் கூட்டம் ஒன்றில் தேசாதிபதி கலந்து கொண்டார். இங்கு தேசாதிபதி எனக் குறிக்கப்படுபவர்.
1. ஆளுநர் 2. ஜனாதிபதி 3. பிரதமர் 4. சபாநாயகர்

21) கண்ணம்மா வளையல் அணிந்து ஆடினாள் இங்கு வளையல் என்பது,
1. இடுகுறிப்பெயர் 2. காரணப்பெயர் 3. காரணஇடுகுறி 4. பொதுப்பெயர்.

22) பஞ்ச பாண்வர் ஐவரும் வந்தனரா? இங்கு இடம் பெற்ற வழு.
1. காலவழு 2. வினாவழு 3. விடைவழு 4. மரபுவழு

23) அதிக புள்ளிகள் பெற்ற குமரனை பாராட்டினார் அதிபர். இங்கு பெற்ற எழுவாய்.
1. புள்ளிகள் 2. குமரன் 3. பாராட்டு 4. அதிபர்

24) நல் + நாள் என்பதைச் சேர்த்தெழுதினால்.
1. நன்னாள் 2. நல்ல நாள் 3. நல்நாள் 4. நன்நாள்

**பொருத்தமற்ற சொற்தொகுதியைத் தெரிவு செய்க.**

25) 1. குன்றாத வினை - எழுது, பாடு, விடு, சொல்
2. குன்றிய வினை - சிரி, நட, வா, உண்
3. பொது வினை - படி, வளை, நனை, தேய்
4. கூட்டு வினை - எழுதுகோல், முன்னே கட்டிவிடு.

26) 1. காலப் பெயர் - மார்கழி, நாள், மாதம், அந்தி
2. சினைப் பெயர் - பூ, கூரை, இலை, வீடு
3. குணப் பெயர் - வாசம், வட்டம், கோபம், நீலம்.
4. தொழிற் பெயர் - பாடுதல், நடத்தல், ஓடுதல், பொரியல்

27) கடற்கரைக்குச் சென்ற சிறுவர்கள் மகிழ்ச்சியில் கூத்தாடினார்கள் நீரில் குதித்தார்கள் கரையேறி ஓடினார்கள் பரவசத்தில் பாடினார்கள். இங்கு இடம்பெற வேண்டிய குறியீடு.
1. விட்டிசைக்குறி (-) 2. காற்புள்ளி (,)
3. அரைப்புள்ளி (;) 4. முக்காற் புள்ளி (:)

28) இளமையின் கண் வாய்த்த செல்வம் என்பது ஏழாம் வேற்றுமையின்.
1. காலம் இடமாதல் 2. சினை இடமாதல்
3. குணம் இடமாதல் 4. தொழில் இடமாதல்

29) சித்திரித்தான் என்பதன் பகுதி.
1. சித்திரி 2. சித்தரித்தல் 3. சித்தம் 4. சித்திரம்

30) அகராதி ஒழுங்கில் அமைந்த சொற்கூட்டம்.
1. தையல், தொகை, தேகம், தோட்டம்.
2. பங்கயம், பீதாம்பரம், புல்லர், பேதை.
3. தண், தாமரை, தெண்ணீர், தையல்.
4. கமலம், காவியம், கெழீஇ, கேண்மை.

**புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31) தப்பியோடிய குற்றவாளியை விரைவாக கைது செய்யும் படி ................................ நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது.
1. பிடியாணை 2. உத்தரவு 3. சட்டம் 4. வழக்கு

32) சுகாதாரமற்ற முறையில் இயங்கிய உணவகங்களுக்கு .......................... அதிகாரிகளால் விதிக்கப்பட்டது.
1. தீர்ப்பு 2. வழக்கு 3. தண்டம் 4. எச்சரிக்கை

33) பாராளுமன்றத் தேர்தலுக்காகப் போட்டியிட்ட சகல கட்சிகளும் ................................. செலுத்த வேண்டும்.
1. வாக்குறுதி 2. கட்டுப்பணம் 3. முன்னுரிமை 4. சொத்துவிபரம்

34) வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ........................... அரசரால் வழங்கப்பட்டது.
1. மானியம் 2. காப்புறுதி 3. நிவாரணம் 4. ஆவணம்


kalvi.lk

35) மாணவர்களின் ஒழுக்கம் சம்பந்தமாக கல்வி அமைச்சரால் .................. பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

1. வர்த்தமானி  2. சுற்றுநிருபம்  3. அறிக்கை  4. சட்டமூலம்

**தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்.
வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

36) இப்பாடலில் கவிஞர் கூறமுற்படுவது,

1. பதவியின் வலிமை  2. கலையின் பெருமை
3. வார்த்தையின் பண்பு  4. தமிழின் சிறப்பு

37) இங்கு எத்தனை உவமைகள் இடம்பெற்றுள்ளன.

1. ஒன்று  2. இரண்டு  3. மூன்று  4. எதுவுமில்லை

38) அமரர் எனக்குறிப்பிட்டவர் யார்?

1. தேவர்  2. தெய்வம்  3. இறந்தோர்  4. கவிஞர்

39) தெள்ளுற்ற என்பது,

1. இயல்புப் புணர்ச்சி  2. தோன்றல் புணர்ச்சி
3. கெடுதல் புணர்ச்சி  4. விகாரப் புணர்ச்சி

40) கீழ்வரும் வாக்கியத்தை ஒழுங்குபடுத்தி எழுதுக.

அ) அவற்றுள் ஒன்று யாழ்நூல்
ஆ) இவர் பிறந்த இடம் கரைதீவு.
இ) நூல்கள் பலவற்றை எழுதியுள்ளார்.
ஈ) சுவாமி விபுலானந்தர் 1892 இல் பிறந்தார்

1. ஆ, ஈ, இ, அ  2. ஆ, ஈ, அ, இ
3. ஈ, ஆ, அ, இ  4. ஈ, ஆ, இ, அ

(40 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

## பகுதி II

**1. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**

1) பின்வரும் தொடரைச் சந்தி பிரிந்து எழுதுக.
வீழு மோரிடை யூற்றினுக் கஞ்சுவோர்.

2) "இரடா மச்சான், நல்லாய் வயிறு முட்டத் தின்னன்ரா" என்ற பேச்சு வழக்கு வாக்கியத்தை எழுத்து வழக்குக்கு மாற்றி எழுதுக.

3) குணதிசையைக் குறித்துக் காட்டுவீரா இங்கு குணதிசை என்பது எத்திசையைக் குறிக்கின்றது.

4) பகலெல்லாம் தண்ணொளியை நல்கிவிட்டு மேல் வானில் அஸ்தமிக்கும் சூரியன் போல அவள் முகம் செக்கர் படிந்து மங்கியது. இங்கு இடம்பெற்ற அணி யாது?

5) குமுதாவின் அழகு நிறைவினை இழந்தது அப்பொழுது. இங்கு இடம் பெற்ற எழுவாய், பயனிலை யாது?

6) "படி" என்பது செயற்படுபொருள் குன்றாத வாக்கியமாகவும் செயற்படுபொருள் குன்றிய வாக்கியமாகவும் ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

7) எங்களுக்கு என்பதை நம்மளுவொழுக்கு எனக் கூறும் மரபு எப்பிரதேச வழக்காக அமைகின்றது.

8) கவிமணியின் பாடல்கள் எளிமை நிறைந்தவை
கவிமணியின் பாடல்கள் இனிமை நிறைந்தவை.
இதனை கூட்டு வாக்கியமாகத் தருக.

9) நற்பண்பு, கீழ்ப்படிவு, ஒழுக்கம், கல்வி முதலானவை மாணவப் பருவத்தினருக்கு முக்கியமானது என்பதை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். இவ்வாக்கியத்தின் வழுவினைத் திருத்தி எழுதுக.

10) கட்டுரை எழுதும் போது திட்டமிடப்படவேண்யவற்றை ஒழுங்குபடுத்துக.
சட்டகம் அமைத்தல், ஒழுங்குபடுத்தல், விடயத்தைத் தெரிவு செய்தல், யாவற்றையும் மனக்கண்கிலே நிலை நிறுத்தல், விடயத்தின் பல்வேறு அம்சங்களை இனங்காணல்.

*(20 புள்ளிகள்)*

2. அ. தகவல் தொழினுட்பத்தின் புரட்சியால் ஊடகங்கள் பல்வேறு தளத்தில் நகர்ந்து செல்கின்றன. மனிதர்கள் தாம் எழுத்து வடிவில் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் ஊடகமாக பத்திரிகை விளங்குகின்றன. இன்று பத்திரிகைகள் மக்கள் மனம் நிறைந்த தகவல் சாதனப் பெட்டகமாக விளங்குகின்றது. எனவே அதிக பயன் தருகின்ற சாதகமான பத்திரிகையின் அவசியத்தை வலியுறுத்தி ஒரு விளக்கக் கட்டுரை.

ஆ. தாய்நாட்டின் வளங்கள் அந்த நாட்டு மக்களின் வாழ்வாதாரத்திற்குப் பெரும் பங்களிப்புச் செய்கின்றன. இதனால், அந்த வளங்களை சரியான முறையில் பயன்படுத்தி பல்வேறு துறையிலும் நாம் முன்னேறலாம் எனக்கூறும் ஒருவருக்கும் வெளிநாடுகளில் வேலை செய்வது உடல் உளச் சுமையைக் குறைக்கும் என்றும் அதிக வருமானம் கிடைக்கும் துறையாகவும் விளங்குகின்றது எனக் குறிப்பிடும் ஒருவருக்கும் இடையேயான உரையாடல் ஒன்று எழுதுக.

இ. உலகிலேயே வியக்கத்தக்க அழகியல் அம்சம் கொண்ட இயற்கையன்னையின் எழிற்கோலம் நிறைந்த பகுதி மலையாகும். மலையில் இயற்கையாக அமைந்த அனைத்து அம்சங்களும் மனிதனுக்குப் பயனுடையதாகவும் விருந்தளிப்பதாகவும் அமைகின்றது. மலைப் பிரதேசத்தின் எழிலை முழுமையாகக் கூறும் வகையிலமைந்த ஒரு வர்ணனைக் கட்டுரை எழுதுக.



kalvi.lk

ஈ. புலமைப் பரீட்சைப் பரீட்சையில் தன்னுடைய அவதானக் குறைவால் குறைந்த புள்ளிகளைப் பெற்றுக் கொண்டான். கபிலேஸ். ஆயினும் சமூகத்திற்கும் தனது குடும்பத்திற்கும் தனது எதிர்காலத்திற்கும் பயன்தரக்கூடிய ஒரு சந்தர்ப்பமாக சாதாரண தரப் பரீட்சை அமைகின்றது என எண்ணினான். நண்பர்களுடனான தனது தொடர்புகளைக் குறைத்துக் கொண்டான். கபிலேசுக்கு கல்வியில் முன்னேறும் எண்ணம் தோன்றியது என்ற கருத்தை அடிப்படையாக வைத்து ஒரு சிறுகதை எழுதுக.

*(25 புள்ளிகள்)*

**3. பின்வரும் பகுதியை ஏறத்தாள 35 – 35 சொற்களில் சுருக்கி எழுதுக.**

உலக இலக்கிய மரபில் இலக்கியம் உருவான சமகாலத்திலேயே இலக்கிய விமர்சனம் என்ற முறையும் தோன்றி விட்டது. இலக்கிய விமர்சனத்துக்கு உள்ளாகாத இலக்கியம் தன்னைக் கூர்மைப்படுத்திக் கொள்ள முடியாது என்பது அறிஞர்களின் கருத்தாகும். தமிழில் தொல்காப்பியர் காலத்திலிருந்தே இலக்கிய விமர்சனம் ஆரம்பித்து விட்டதை எம்மால் அறிய முடிகின்றது. இலக்கிய விமர்சனமானது சமகால இலக்கிய நிகழ்வுகளுக்கும் எதிர்கால இலக்கிய தேவைகளுக்கும் இடையே இணைப்பினையும் இயைபினையும் ஏற்படுத்தும் ஒன்றாக அமைகிறது. எனவே இன்றைய மாணவ சந்ததியினர் சிறந்தவராகத் திகழவும் உயர்தரமான ஆக்க சிந்தனையாளராக மிளிரவும் வேண்டுமெனில் விமர்சனத்தின் முக்கியத்துவம் பற்றி அறிந்தவர்களாகத் திகழ்வது அவசியமானதாகும். இதன் வாயிலாகத் தாமே பரிணமிக்க விமர்சகர்களாவம் வேண்டியது அவசியமாகும். *(10 புள்ளிகள்)*

**4. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

ஈழ மண்டலத்திலேயே நல்ல பேரறிஞராய்க் கவித்துவ சமார்த்தியத்தில் தலை சிறந்தவர் நல்லூர் சின்னத்தம்பிப்புலவர். இவருக்கு அடுத்த படியில் வைத்து எண்ணுதற்குரிய புலவர் முத்துக்குமார கவிராச சேகரர். இவர் தமிழைப் பாதுகாத்த சி.வை தாமோதரம் பிள்ளையின் உபாத்தியாயர். தமிழ் வளர்த்த சுன்னாகம் குமார சுவாமிப் புலவரின் பாட்டனார். முத்துக்குமார கவிராச சேகருக்கு அடுத்த படியில் சொல்லக்கூடியவர் இருபாலைச் சேனாதிராய முதலியார். இவர் ஆறுமுக நாவலரின் உபாத்தியார். அடுத்து உடுப்பிட்டி சிவ சம்புப் புலவர் இந்தவரிசை இனினும் வளரலாம். கத்தரித் தோட்டத்து வெருளியும், ஆடிப்பிறப்புக்கு கொழுக்கட்டையும் இன்றைக்குங் குழந்தைகள் வாயிலே தவழுகின்றன; இனிக்கின்றன. அதிர வருகின்ற மாணிக்கங்களையும் வண்ணானின் மொழிகேட்டு வனம் விடுத்த சீதையை இந்நாளும் தேடுகின்ற குரங்குகளையும் வடதேசத்து முதிர்ந்த அறிஞர்களும் புகழ்கின்றனர். இவைகளைப் புகழந்தவர் நவாலியூர் சோமசுந்தரப் புலவர்.

1. ஈழத்தில் நல்ல பேரறிஞராக விளங்கியவர் யார்?
2. தாமோதரம் பிள்ளையின் உபாத்தியாயர் யார்?
3. இங்கு மூன்றாம், நான்காம் நிலைகளில் குறிப்படப்பட்டோர் யார்?
4. குழந்தையின் வாயில் இன்றும் தவழுகின்ற விடயங்கள் யாவை?
5. இப்பகுதியில் இடம்பெற்ற காப்பியப் பாத்திரம்?

*(10 புள்ளிகள்)*

5. உமது பிரதேசத்தில் போதைவஸ்து என்ற மாயை மிகவிரைவாகப் பரவி வருகின்றது. போதைவஸ்துக்கள் முதலில் மாணவர்களையே தாக்கவல்லது. இதனால் பல்வேறு பாதக விளைவுகள் ஏற்படும். இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். என்பதை பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டியுள்ளது. எனக்குறிப்பிட்டு பத்திரிகை ஆசிரியருக்கு 100 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக. *(15 புள்ளிகள்)*



kalvi.lk

## பகுதி III

**1. பின்வரும் வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.**

1. சிறுமீன் சினையினும் நுண்ணியதேயாயினும் அண்ணல் யானை.
   அ) இங்கு இடம்பெற்ற வாக்கிய இணைப்பிடைச் சொல் எது?
   ஆ) இப்பாடடிக்குரிய ஆசிரியர் யார்?

2. யானை அனையவர் நண்பொரீஇ அனையார்.
   அ) ஒரீஇ என்பது குறிக்கும் பொருள் யாது?
   ஆ) அனையார் என்பதன் அர்த்தம் யாது?

3. ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு இங்கு
   அ) இங்கு இடம்பெற்ற உரிச்சொல்யாது?
   ஆ) இங்கு இடம்பெற்ற எழுவாய் யாது?

4. தப்பிய கந்தைப் பீதாம்பரம்.
   அ) பீதாம்பரம் என்பதன் பொருள்.
   ஆ) இப்பாடலைப் பாடியவர் எந்நாட்டவர்.

5. மிக்காரைச் சேர்தல் மிகமான முன் இனிதே.
   அ) இங்கு மாகை என்பது குறிக்கும் பொருள்.
   ஆ) இப்பாடல் இடம்பெற்ற இலக்கியத்தைப் பாடியவர் யார்.

6. எழுந்தவர்கள் வேறு வியாசம் பண்ணிக் கொண்டு வெளியே போய் விட்டார்கள்.
   அ) வியாசம் என்பதன் கருத்து.
   ஆ) இல்லரி இடம்பெற்ற இலக்கியத் தொகுப்பு.

7. பிரசண்ட மாருதத்திற்கும் பிறகு என்று சொல்கிற ‘பிறகு’ அந்தச் சபையில் நிலவியது.
   அ) மாருதம் என்ற சொல்லின் ஒத்தசொல் யாது?
   ஆ) இங்கு ‘பிறகு’ என்ற சொல் குறிப்பது?

8. யாண்டு தேர் செலுமாங்கிழுப் புற்றென
   கோற்ற சிந்தனை யோடேகி யதில்”
   அ) இக் கூற்றைக் கூறியவர் யார்?
   ஆ) யாண்டு என்பதன் பொருள் யாது?

9. நண்ணுறப் பெறல் திண்ணம் தாருமன
   இலங்கு நூலுணர் ஞானியர் கூறுவர்
   அ) இலங்கு என்பதன் கருத்து.
   ஆ) ஞானியர் கூறுவது எதனை

10. பூத்தஜோதி வதனம் திரும்புமேல்
    புலன ழிந்தொரு புத்துயிர் ரெய்துவேன்
    அ) இங்கு இடம் பெற்ற அணி யாது?
    ஆ) இங்கு இடம் பெற்ற உணர்வு யாது?

(20 புள்ளிகள்)



Education கல்வி அധ്യാപന
kalvi.lk

**2. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடை பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

1. தண்டா மரையினுடன் பிறந்தும் தண்தேன்
   நுகரா மண்டுகம்
   வண்டோ கானத்திடையிருந்து வந்து
   கமலமது வுண்ணும்
   பண்டே பழகியிருந்தாலும் அறியார்
   புல்லர் நல்லோரை
   கண்டே களித் தங்குறலாடித் தம்மிற்
   கலப்பர் கற்றோரே

   அ) வண்டு பற்றிக் கூறப்பட்ட கருத்துக்கள் யாவை?
   ஆ) இப்பாடல் உணர்த்தும் உண்மைப் பொருள் யாது?

2. கணக்காய ரில்லாத வூரும் பிணக்கறுக்கு
   மூத்தோரை யில்லா வவைக்களனும் - பாத்துண்ணு
   தன்மையிலான ரயலிருப்பு மும்மூன்று
   நன்மை பயத்த லில

   அ) பகுத்து என்பதால் குறிப்பிடப்படும் ஐந்து விடயங்களும் எவை?
   ஆ) இம் மூன்று என்பதால் கூறப்பட்டோர் யார்?

3. நீரெடுத்து வருவதற்கு அவள் மணி
   நித்திலப் புன்னகை சுடர் வீசிடப்
   போரெடுத்து வருமதன் முன்செலப்
   போகும் வேளை யதற்குத் தினந்தோறும்
   வேரெடுத்துச் சுதந்திர நற்பயிர்
   வீந்திரடச் செய்தல் வேண்டிய மன்னர் தம்
   சீரெடுத்த புலையியற் சாரர்கள்
   தேச பத்தர் வரவினைக் காத்தார் போல்

   அ) நீரெடுக்க வரும் பெண்ணின் தோற்றத்தினை விளக்குக.
   ஆ) இங்கு மன்னன் - படைவீரர் மனநிலை எவ்வாறானது என்பதை விளக்குக.

4. புலவர்களுடைய பாட்டுக்களில் அவர்கள் கருதாத கருத்துக்கள் அமைகின்றதுண்டு. கம்பருடைய சில அடிகளில் அன்றைக்கு அப்படிப்பட்ட பொருள் அமைந்து கிடந்தது. 'விலகு பிள்ளை' என்று வழக்கமாக சொல்வதைச் சொல்லும் முன்னமே விசுவநாதபிள்ளை மேடையில் விலகி இடம் கொடுத்தார். நாவலர் அவரிகளின் நிலை கம்பீரமான தோற்றம் - வீறுகொண்ட பார்வை எண்ணங்களின் வேகம் - இவற்றை வருணிக்க அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கம்பர் இல்லை. 'அது கிடக்க எடுத்துக் கொண்டு வா, தபால் தந்திக் கட்டுக்களை'' என்றார். நாவலர் அவர்கள் எல்லோரும் பிரமித்துப் போனவர்கள்.

   அ) நாவலருடைய நிலை எவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளது.
   ஆ) எல்லோரும் பிரமித்துப் போன விடயம் எது?



kalvi.lk

5. கைவேல் - எறிகின்றவேல் - இறகுள்ள அம்பு - இல்லாத அம்பு – வாள் - சக்கரம் இவற்றுக்கு மேலே தெய்வப் படைகளிலும் கைவைக்கின்ற சமயம் அந்தச் சமயம் பிறிந்தோ கட்சிக்குப் பேசவந்தவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ள பிரபல வழக்கறிஞர்கள். வாதம் இல்லாத இடத்திலும் வாதம் வருவிக்கக் கூடியவர்கள் நாவலர் அவர்களின் காசம் அவர்களுக்கு எதிர்பாராத அனுகூலம் அளித்து பிறிற்றோவை ஆகாசத்திலே தூக்கிக் கொண்டு போய்விட்டது. விசுவாசநாத பிள்ளையும் நிலைதளர்ந்து போனார். அவருடைய பார்வை நாவலர் அவர்கள் முகத்தில் விழுந்தது. சனங்களும் அங்கே தான் பார்க்கிறார்கள்.

அ) வாதத்தின் உச்சம் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆ) பிறிற்றோவை ஆகாயத்தின் உச்சிக்குக் கொண்டு போய் விட்டது எது?

(20 புள்ளிகள்)

**3ஆம் 4 ஆம் வினாக்கள் கட்டாய வினாவாகும்.**

3. 'தேம்படுபனையின் திரள் பழத்தொருவிதை' என்ற பாடலில் உருவத்தை வைத்து அறிவை மதிப்பிட முடியாது என்பதையும் உவமையணிப் பயன்பாட்டையும் விளக்குக.

அல்லது

நாவலர் எழுந்தார் என்னும் கட்டுரையில் 'லாதமகா சபைக்கு நாவலர் தலைமை தாங்க முடியாத காரணத்தையும், வாதமகா சபையில் இடம் பெற்ற விடயத்தையும் விளக்குக.

(15 புள்ளிகள்)

4. உப்பில் காக்கஞ்சி என்ற பாடலில் 'மனங்கொண்டது மாளிகை' என்ற விடயமும் இனியவை நாற்பதில் இனியவை எவையெனக் கூறப்பட்ட விடயங்களும் எவை என்பதை விளக்குக.

நாவலர் எழுந்தார் என்னும் கட்டுரையில்

அ) நாவலர் நடந்த காட்சியை கம்பராமாயணத்துடன் ஒப்பிட்டு விளக்குக.

ஆ) பிறிற்றோ நேர்மையற்றவர் என்பதற்கான சான்றையும் விளக்குக.

(15 புள்ளிகள்)

**5ஆம், 6ஆம், 7ஆம் வினாக்களில் எவையேனும் ஒரு வினாவுக்கும் மட்டும் விடை தருக.**

5. இனியவை நாற்பது குறிப்பிடும் மூன்று இனிதும் எவையென விளக்குக.

6. "நாவலர் எழுந்தார்" என்னும் கட்டுரையில் வை.விசுவாசநாத பிள்ளை தலைமை தாங்கியதன் பின்னணியை விளக்குக.

7. "சுயசரிதை" என்ற பகுதியில் "பெண்ணின் தோற்றத்திலே பாரதி தன்னை தான்" என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)



kalvi.lk

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
JAFFNA HINDU COLLEGE

| | T | I |
|---|---|---|

முதலாந் தவணைப் பரீட்சை - 2019
1st Term Examination - 2019

| | | | |
|---|---|---|---|
| தமிழ் மொழி Tamil | | நேரம் Time | 2 மணித்தியாலம் |
| தரம் Grade | 10 | பகுதி Part | III |


யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி JAFFNA HINDU COLLEGE

## பகுதி III

**1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் வினாக்களுக்கும் விடை தருக.**

**1. பின்வரும் வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.**

1. சிறுமீன் சினையினும் நுண்ணியதேயாயினும் அண்ணல் யானை.
   அ) இங்கு இடம்பெற்ற வாக்கிய இணைப்பிடைச் சொல் எது?
   ஆ) இப்பாடலடிக்குரிய ஆசிரியர் யார்?

2. யானை அனையவர் நண்பொரீஇ நாய் அனையார்.
   அ) ஒரீஇ என்பது குறிக்கும் பொருள் யாது?
   ஆ) அனையார் என்பதன் அர்த்தம் என்ன?

3. ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு இங்கு
   அ) இங்கு இடம்பெற்ற உரிச்சொல்
   ஆ) இங்கு இடம்பெற்ற எழுவாய்

4. தப்பிய கந்தைப் பீதாம்பரம்.
   அ) இப்பாடலைப் பாடியவர் எந்நாட்டவர்.
   ஆ) இவருடைய பன்முகங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

5. மிக்காரைச் சேர்தல் மிகமான முன் இனிதே.
   அ) இங்கு மாண என்பது குறிக்கும் பொருள்.
   ஆ) இப்பாடல் இடம்பெற்ற இலக்கியத்தைப் பாடியவர் யார்.

6. எழுந்தவர்கள் வேறு வியாசம் பண்ணிக் கொண்டு வெளியே போய் விட்டார்கள்.
   அ) வேறு வியாசம் என்பதன் கருத்து.
   ஆ) இவ்வரி இடம்பெற்ற இலக்கியத் தொகுப்பு.

7. பிரசண்ட மாருதத்திற்கும் பிறகு என்று சொல்கிற ‘பிறகு’ அந்தச் சபையில் நிலவியது.
   அ) மாருதம் என்ற சொல்லின் ஒத்தசொல் யாது?
   ஆ) இங்கு ‘பிறகு’ என குறிப்பிடப்பட்டது எதனை?

8. யாண்டு தேர் செலுமாங்கிழுப் புற்றென
   கோத்த சிந்தனை யோடேகி யதில்”
   அ) இக் கூற்றைக் கூறியவர் யார்?
   ஆ) யாண்டு என்பதன் பொருள் யாது?



kalvi.lk

9. நண்ணுறப் பெறல் திண்ணம் தாமென
இலங்கு நூலுணர் ஞானியர் கூறுவர்
அ) இலங்கு என்பதன் கருத்து.
ஆ) ஞானியர் கூறுவது எதனை

10. பூத்தஜோதி வதனம் திரும்புமேல்
புலன ழிந்தொரு புத்துயிர் ரெய்துவேன்
அ) இங்கு இடம் பெற்ற அணி யாது?
ஆ) இங்கு இடம் பெற்ற உணர்வு யாது? (20 புள்ளிகள்)

**1. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடை பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

1. தண்டா மரையினுடன் பிறந்தும் தண்டேன்
   நுகரா மண்டுகம்
வண்டோ கானத்திடையிருந்து வந்து
   கமலமது வுண்ணும்
பண்டே பழகியிருந்தாலும் அறியார்
   புல்லர் நல்லோரை
கண்டே களித் தங்குறவாடித் தம்மிற்
   கலப்பர் கற்றோரே

அ) வண்டு பற்றிக் கூறப்பட்ட கருத்துக்கள் யாவை?
ஆ) இப்பாடல் உணர்த்தும் உண்மைப் பொருள் யாது?

2. கணக்காய ரில்லாத வூரும் பிணக்கறுக்கும்
மூத்தோரை யில்லா வவைக்களனும் - பாத்துண்ணும்
தன்மையிலாள ரயலிருப்பு மிம்மூன்றும்
நன்மை பயத்த லில

அ) பகுத்து என்பதால் குறிப்பிடப்படும் ஐந்தும் எவை?
ஆ) இம் மூன்று என்பதால் கூறப்பட்டோரில் இருவரைக் குறிப்பிடுக.

3. நீரெடுத்து வருவதற்கு அவள் மணி
   நித்திலப் புன்னகை சுடர் வீசிடப்
போரெடுத்து வருமதன் முன்செலப்
   போகும் வேளை யதற்குத் தினந்தோறும்
வேரெடுத்துச் சுதந்திர நற்பயிர்
   வீழ்ந்திடச் செய்தல் வேண்டிய மன்னர் தம்
சீரெடுத்த புலையியற் சாரர்கள்
   தேச பத்தர் வரவினைக் காத்தர் போல்

அ) நீரெடுக்க வரும் பெண்ணின் தோற்றத்தினை விளக்குக.
ஆ) இங்கு மன்னன் - படைவீரர் மனநிலை எவ்வாறானது என்பதை விளக்குக.

4. புலவர்களுடைய பாட்டுக்களில் அவர்கள் கருதாத கருத்துக்கள் அமைகின்றதுண்டு. கம்பருடைய சில அடிகளில் அன்றைக்கு அப்படிப்பட்ட பொருள் அமைந்து கிடந்தது. ‘விலகு பிள்ளை’ என்று வழக்கமாக சொல்வதைச் சொல்லும் முன்னமே விசுவநாதபிள்ளை மேடையில் விலகி இடம் கொடுத்தார். நாவலர் அவரிகளின் நிலை கம்பீரமான தோற்றம் - வீறுகொண்ட பார்வை எண்ணங்களின் வேகம் - இவற்றை வருணிக்க அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கம்பர் இல்லை. ‘அது கிடக்க எடுத்துக் கொண்டு வா, தபால் தந்திக் கட்டுக்களை” என்றார் நாவலர் அவர்கள் எல்லோரும் பிரமித்துப் போனவர்கள்.

அ) நாவலருடைய நிலை எவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளது.
ஆ) எல்லோரும் பிரமித்துப் போன விடயம் எது?


kalvi.lk

5. கைவேல் - எறிகின்றவேல் - இறகுள்ள அம்பு - இல்லாத அம்பு – வாள் - சக்கரம் இவற்றுக்கு மேலே தெய்வப் படைகளிலும் கைவைக்கின்ற சமயம் அந்தச் சமயம் பிறிந்தோ கட்சிக்குப் பேசவந்தவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ள பிரபல வழக்கறிஞர்கள். வாதம் இல்லாத இடத்திலும் வாதம் வருவிக்கக் கூடியவர்கள் நாவலர் அவர்களின் காசம் அவர்களுக்கு எதிர்பாராத அனுகூலம் அளித்து பிறிற்றோவை ஆகாசத்திலே தூக்கிக் கொண்டு போய்விட்டது. விசுவாசநாத பிள்ளையும் நிலைதளர்ந்து போனார். அவருடைய பார்வை நாவலர் அவர்கள் முகத்தில் விழுந்தது. சனங்களும் அங்கே தான் பார்க்கிறார்கள்.
   அ) வாதத்தின் உச்சம் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
   ஆ) பிறிற்றோவை ஆகாயத்தின் உச்சிக்குக் கொண்டு போய் விட்டது எது?

(4 x 5 =20 புள்ளிகள்)

**3ஆம் 4 ஆம் வினாக்கள் கட்டாய வினாக்களாகும்.**

2. 'தேம்படுபனையின் திரள் பழத்தொருவிதை' என்ற பாடலில் உருவத்தை வைத்து அறிவை மதிப்பிட முடியாது என்பதையும் உவமையணிப் பயன்பாட்டையும் விளக்குக.

அல்லது

நாவலர் எழுந்தார் என்னும் கட்டுரையில்
   அ) 'வாதமகா சபைக்கு வை. விசுவாநாதப்பிள்ளை் தலைமை தாங்கிய பின்னணியை யும்
   ஆ) முடியாத காரணத்தையும், வாதமகா சபையில் இடம் பெற்ற விடயத்தையும் விளக்குக.

(15 புள்ளிகள்)

3. முதுமொழி வெண்பாவில் 'மனங்கொண்டது மாளிகை' என்ற விடயமும் இனியவை நாற்பதில் 'இனியவை' எனக் கூறப்பட்ட விடயங்களும் எவை என்பதை விளக்குக.

அல்லது

நாவலர் எழுந்தார் என்னும் கட்டுரையில்
   அ) நாவலர் எழுந்த காட்சி எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது என்பதையும்
   ஆ) பிறிற்றோ நேர்மையற்றவர் என்பதற்கான சான்றையும் விளக்குக.

(15 புள்ளிகள்)

**5ஆம், 6ஆம், 7ஆம் வினாக்களில் எவையேனும் ஒரு வினாவுக்கும் மட்டும் விடை தருக.**

4. அடக்கமுடையாரின் இயல்பை ஔவையார் குறிப்பிடுவதிலுள்ள சிறப்பை விளக்குக.

5. "நாவலர் எழுந்தார்" என்னும் கட்டுரையில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் மொழிநடைச் சிறப்பைத் தருக.

6. பாரதியாரின் 'சுயசரிதை' என்ற பகுதியில் பெண் மீது பாரதி கொண்ட காதல் வெளிப்படுமாற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)


kalvi.lk

ONLINE CLASSES - 2025

May

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் O/L வரை**

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**